நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை

**அனுப்புநர்**
திரு.ம.செந்தில் முருகன், M.Com.,
ஆணையாளர்
நகராட்சி அலுவலகம்
கரூர்– 639 001

**பெறுநர்**
நகராட்சி நிர்வாக ஆணையர்
எழிலகம் இணைவகம் 6வது தளம்
சேப்பாக்கம்
சென்னை–600 005

**வழி**
நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்
ஸ்ரீகிருஷ்ண இராஜேந்திரா சத்திரம் வளாகம்
அரிசிபாளையம் (அஞ்சல்)
சேலம் –636 009

---

**ந.க. எண்.இ5/12409/2018, நாள் : 09.11.2018**

அய்யா

**பொருள்** : கரூர் நகராட்சி – பாதாள சாக்கடை திட்டம் – பாதாள சாக்கடை திட்டத்தில் வீட்டு கழிவறை இணைப்புகள் வழங்குதல் – பாதாள சாக்கடை வீட்டு கழிவறை இணைப்புகளுக்கான முன் வைப்புத் தொகை மற்றும் சேவை கட்டணங்களை மாற்றம் செய்து ஒரே விகிதத்தில் வசூல் செய்யும்வகையில் திருத்தங்கள் மேற்கொண்ட வைப்புத் தொகை, சேவைக் கட்டணம் மற்றும் கழிவறை இணைப்புகள் வழங்கும் நடைமுறை விதிகள் குறித்த உபவிதிகளுக்கு அனுமதி வழங்கக் கோருதல் – தொடர்பாக

**பார்வை** : 1)நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடித ந.க.எண்.24687/2011/ஆர்1 நாள்.30.08.2017
2)நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.13277/2017/குவி1 நாள்.27.06.2018
3)இந்நகர்மன்ற தீர்மான எண்.499 நாள்.31.10.2017
4)இந்நகர்மன்ற தீர்மான எண்.1089 நாள்.10.09.2018

---------

பார்வையில் காணும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கையில், நகராட்சியில் எவ்வாறு எந்த விகிதத்தில் வரிவிதிப்பு செய்யப்பட்டதோ அதே விகிதத்தில் நகராட்சியில் புதிதாக சேர்க்கப்பட்ட பகுதிகளுக்கும் வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும் எனவும், பழைய வரிவிதிப்பினை தற்போதுள்ள நகராட்சியின் அடிப்படை மதிப்பின்படி மாற்றம் செய்யப்பட வேண்டும் எனவும், அதேபோல் பாதாள சாக்கடை திட்டம் மற்றும் குடிநீர் கட்டண விகிதங்கள், வைப்புத் தொகைகளையும் ஒரே மாதிரியாக மாற்றம் செய்யப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி பாதாள சாக்கடை திட்டத்தில் வீட்டு கழிவறை இணைப்புகள் வழங்கும் பணியில் வைப்புத் தொகை மற்றும் சேவை கட்டணங்களை ஒரேமாதிரி செலுத்தும்வகையில் தற்போதுள்ள நிலவரத்தின்படி பாதாள சாக்கடை திட்டம் பராமரித்தல் தொடர்பான செலவினம் மற்றும் பாதாள சாக்கடை திட்டத்தில் விடுபட்ட பகுதிகளில் கழிவுநீர் குழாய்கள் பதித்து திட்டத்தினை முழுமையாக செயல்படுத்தி முழு பயன்பாட்டிற்கு கொண்டு வரவும் தாந்தோணி

மற்றும் சணப்பிரட்டி பகுதிகளில் புதிதாக பாதாள சாக்கடை திட்டத்தினை அமுல்படுத்தவும் பெறப்படும் நிதி ஒதுக்கீட்டில் நகராட்சியின் பங்குத் தொகையினை செலுத்தும்வகையிலும், பாதாள சாக்கடை திட்டத்தின் பராமரிப்பு பணிகளில் ஏற்படும் செலவினங்களை ஈடுசெய்யும் வகையில் சேவை கட்டணங்களை மாற்றம் செய்து கீழ்காணும் விபரப்படி வைப்புத் தொகை மற்றும் குடிநீர் கட்டணங்களை வசூல் செய்ய பார்வை–3ல் காணும் மன்றக் கூட்டத்தில் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

பாதாள சாக்கடை திட்டத்தில் வீட்டு கழிவறை இணைப்புகளுக்கான வைப்புத் தொகை மற்றும் சேவைக்கட்டணம் (ஏற்கனவே நடைமுறையில் உள்ளது).

| வ. எண் | கட்டண விவரம் | கரூர் நகராட்சி | | இனாம்கரூர் நகராட்சி | | தாந்தோணி நகராட்சி | | சணப்பிரட்டி ஊராட்சி | | உபவிதிகளின்படி வைப்புத் தொகை மற்றும் சேவைக் கட்டணங்கள் நிர்ணயம் செய்த நாள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | டெபாசிட் தொகை | சேவை கட்டணம் மாதம் ஒன்றுக்கு | டெபாசிட் தொகை | சேவை கட்டணம் மாதம் ஒன்றுக்கு | டெபாசிட் தொகை | சேவை கட்டணம் மாதம் ஒன்றுக்கு | டெபாசிட் தொகை | சேவை கட்டணம் மாதம் ஒன்றுக்கு | |
| 1 | வீட்டு உபயோகம் | ரூ.5000/– | ரூ.115/– | ரூ.2000/– | ரூ.50/– | – | – | – | – | 1)இனாம்கரூர் நகர்மன்ற தீர்மான எண்.577 நாள்.20.12.2000 2)கரூர் நகராட்சி நகர்மன்ற தீர்மான எண்.67 நா..31.01.2000 |
| 2 | வணிக உபயோகம் | ரூ.10,000/– ரூ.25,000/– | ரூ.230/– | ரூ.5,000/– ரூ.10,000/– | ரூ.100/– | – | – | – | – | |

பாதாள சாக்கடை திட்ட வீட்டு கழிவறை இணைப்புகளுக்கு ஒரே விகிதத்தில் மாற்றம் செய்து நடைமுறைப்படுத்த வேண்டிய வைப்புத் தொகை மற்றும் சேவை கட்டண விபரம்

| வ.எண் | உபயோகமுறை | முன்வைப்புத் தொகை | சேவைக் கட்டணம் மாதம் ஒன்றுக்கு |
|---|---|---|---|
| 1) | வீட்டு உபயோகம் | ரூ.5000/– | ரூ.115/– |
| 2) | வணிக உபயோகம் | ரூ.10,000/– ரூ.25,000/– | ரூ.230/– |

தற்போது மாற்றம் செய்து நடைமுறைப்படுத்தி அமுல்படுத்தப்படவுள்ள கட்டண விபரம்

| வ.எண் | தற்போது நடைமுறையில் உள்ள கட்டண விபரம் குறித்த உபவிதிகள் | திருத்தம் செய்ய கட்டண விபரம் குறித்த உபவிதிகள் |
|---|---|---|
| 1 | புதைவடிகால் திட்ட கழிவறை இணைப்பு வீட்டு உபயோக முறையில் | |
| | 1)முன்வைப்புத் தொகை ரூ.2,000/– (இனாம்கரூர்) | ரூ.5,000/– |
| | 2)மாதாந்திர சேவைக் கட்டணம் ரூ.50/– (இனாம்கரூர்) | ரூ.115/– |
| 2) | புதைவடிகால் திட்ட கழிவறை இணைப்பு வணிக உபயோக முறையில் | |
| | 1)முன்வைப்புத் தொகை ரூ.5,000/– | ரூ.10,000/– |
| | 2)மாதாந்திர சேவைக் கட்டணம் ரூ.100/– | ரூ.230/– |
| 3) | தொழிற்சாலை உபயோகத்தில் | |
| | 1)முன்வைப்புத் தொகை ரூ.10,000/– | ரூ.25,000/– |
| | 2)மாதாந்திர சேவைக் கட்டணம் ரூ.100/– | ரூ.230/– |

மேற்படி கட்டண முறைகளில் திருத்தங்கள் மேற்கொண்டு பத்தாண்டுகள் மேலாகிவிட்டதினாலும், பாதாள சாக்கடை திட்ட இயக்குதல் பராமரிப்பு பணியில் பணியாளர்கள் சம்பளம், மின்கட்டணம் உயர்வு மற்றும் பராமரிப்பு பணியில் ஏற்படும் செலவினம் அடிப்படையிலும், நகராட்சியில் விடுபட்ட பகுதிகளில் புதைவடிகால் திட்டத்தினை செயல்படுத்தவும், தாந்தோணி மற்றும் சணப்பிரட்டி பகுதிகளில் புதிதாக பாதாள சாக்கடை திட்டத்தினை அமுல்படுத்த திட்ட மதிப்பீட்டினை தயார் செய்து உரிய நிதி ஒதுக்கீடு கோரும்பட்சத்தில் நகராட்சியின் பங்கு தொகையினை ஈடுசெய்யும்வகையில் கட்டண விகிதங்களில் உயர்வு செய்து பார்வை–4ல் காணும் மன்ற தீர்மானத்தின்படி ஒப்புதல் பெறப்பட்டுள்ளதை உபவிதிகளில் திருத்தங்கள் மேற்கொண்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், தற்போது நகராட்சியில் வீட்டு கழிவறை இணைப்புகளை TUFIDCO நிறுவனத்தில் IUDM திட்டத்தில் வட்டியில்லா கடனாா நிதி ஒதுக்கீட்டினை பெற்று ஒப்பந்ததாரர் மூலம் வீட்டு உரிமையாளர்களின் வீடுகளுக்கு வீட்டு கழிவறை இணைப்புகள் வழங்கப்பட்டு வருவதால் அதில் இணைப்பு வழங்குவதில் ஏற்படும் செலவினம் மற்றும் இணைப்பிற்கான முன்வைப்புத் தொகையினை கணக்கீடு செய்து சொத்துவரி விதிப்பு கேட்புத் தொகையுடன் சேர்த்து சொத்துவரி வசூல் செய்யும்போது 10 சம தவணைகளில் வசூல் செய்யும் வகையில் இணைய தளத்தில் ஏற்றம் செய்து வசூல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதை உப விதிகளில் சேர்த்து திருத்தங்கள் மேற்கொண்டுள்ள உபவிதிகளை இத்துடன் இணைத்து சமர்ப்பித்துள்ளேன்.

எனவே, பாதாா சாக்கடை திட்டத்தில் வீட்டு கழிவறை இணைப்புகள் வழங்குவதற்கு ஒரே முறையிலான வைப்புத் தொகை மற்றும் சேவைக் கட்டணம், இணைப்பு வழங்கும் முறை மற்றும் பராமரிப்பு முறைக்கான உபவிதிகளுக்கு உரிய அனுமதி வழங்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

9/11/18

ஆணையாளர்
கரூர் நகராட்சி

இணைப்பு
திருத்தம் செய்துள்ள உபவிதிகள்
மற்றும் மன்ற தீர்மான நகல்கள்

9.11.18

## 10.09.2018ம் தேதிய நகர்மன்ற தீர்மான எண்.1089ன் உண்மை நகல்

**பொருள்** கரூர் நகராட்சி இனாம்கரூர், கரூர், தாந்தோணி மற்றும் சணப்பிரட்டி பகுதிகளை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த கரூர் நகராட்சியாக 25.10.2011 முதல் செயல்பட்டு வருகிறது. அதன்படி தற்போது கரூர் நகராட்சி சிறப்புநிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சியின் புதை வடிகால் திட்டத்தில் கீழ்காணும் விபரப்படி வீட்டு புதை வடிகால் இணைப்புகள் வழங்குவதில் டெபாசிட் தொகை மற்றும் புதை வடிகால்கழிவறை இணைப்புகளில் சேவை கட்டணங்களை வசூல் செய்ய கட்டண விகிதங்களை நிர்ணயம் செய்து உப விதிகள் இயற்றி வீட்டு புதைவடிகால் இணைப்புகளுக்கான டெபாசிட் தொகை மற்றும் கழிவறை இணைப்புகளுக்கான சேவை கட்டணங்களை கீழ்க்கண்டவாறு வசூல் செய்யப்பட்டு வருகிறது.

| வ. எண் | புதை வடிகால் இணைப்புக்கான கட்டணம் முறை | இனாம்கரூர் நகராட்சி | | தாந்தோணி நகராட்சி | | சணப்பிரட்டி ஊராட்சி | | கரூர் நகராட்சி | | உப விதிகளின்படி டெபாசிட் மற்றும் புதை வடிகால் கட்டணங்கள் நிர்ணயம் செய்த நாள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | டெபாசிட் தொகை | புதை வடிகால் கட்டணம் மாதம் ஒன்றுக்கு | டெபாசிட் தொகை | புதை வடிகால் கட்டணம் மாதம் ஒன்றுக்கு | டெபாசிட் தொகை | புதை வடிகால் கட்டணம் மாதம் ஒன்றுக்கு | டெபாசிட் தொகை | புதை வடிகால் கட்டணம் மாதம் ஒன்றுக்கு | |
| 1) | வீட்டு உபயோக இணைப்புகளுக்கு புதை வடிகால் வசூல் செய்யப்படும் (Domestic) வசூல் செய்யப்படும். | ரூ.2000/– | ரூ.50/– | – | – | – | – | ரூ.5000/– | ரூ.115/– | 1) இனாம்கரூர் நகர்மன்ற தீர்மான எண்.541/ 30.08.04 நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறைகள் கடித ந.க.எண். 3760/2004/டி1 நாள்.18.02.2004 |
| 2) | வீட்டு உபயோக மில்லாத மற்ற , வணிக முறை புதை வடிகால் இணைப்புகளுக்கு (Non Domestic-Commercial) வசூல் செய்யப்படும் | ரூ.3000/–<br>ரூ.5000/– | ரூ.100/– | – | – | – | – | ரூ.10,000/–<br>ரூ.25,000/– | ரூ.230/– | |

மேற்படி கட்டண முறைகள் நிர்ணயம் செய்து குறைந்தபட்சம் பத்தாண்டுகளுக்கு மேலாகிவிட்டதினாலும், புதைவடிகால் திட்ட இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணியில் பணியாளர்கள் சம்பளம், மின்கட்டணம் மற்றும் பராமரிப்பு பணியில் தற்போதைய விலைவிகிதத்தின்படி ஏற்படும் செலவினங்களின் அடிப்படையிலும், நகராட்சியில் விடுபட்ட பகுதிகளில் புதை வடிகால் திட்டத்திற்கான திட்ட மதிப்பீட்டினை தயார் செய்து உரிய நிதி ஒதுக்கீடு கோரும்பட்சத்தில் நகராட்சியின் பங்குத் தொகையாக நிர்ணயம் செய்யப்படும் பங்குத் தொகையினை ஈடுசெய்யவும், புதை வடிகால் திட்டத்தினை சிறப்பாக இயக்கவும் பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு வீட்டு கழிவறை இணைப்பு வழங்குவதில் வசூல் செய்யும் டெபாசிட்

மற்றும் கட்டண விபரங்களை மாற்றியமைக்கப்பட வேண்டிய அவசியத்திற்கு ஆளாக நேரிடுவதாலும், தற்போது ஒருங்கிணைந்த கரூர் நகராட்சியாக செயல்பட்டு வருவதினால் இனாம்கரூர் மூன்றாம்நிலை நகராட்சியாக இருந்த காலத்தில் புதை வடிகால் இணைப்பு பெறுவதற்கு நிர்ணயம் செய்த டெபாசிட் மற்றும் சேவை கட்டண விபரங்கள் உயர்வு செய்து உப விதிகளில் திருத்தங்கள் மேற்கொண்டு நடவடிக்கைகள் மேகொள்ளவும், தற்போது ஒருங்கிணைந்த கரூர் நகராட்சியில் இனாம்கரூர் மற்றும் கரூர் பகுதிக்கு மட்டும் புதை வடிகால்திட்டத்தில் கழிவுநீர் குழாய் பதிக்கப்பட்டு திட்டத்தினை செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதிலும் ஒருசில சாலைகளில் கழிவுநீர் குழாய்கள் பதிக்கப்படாமல் உள்ளது. மேலும் தாந்தோணி, சணப்பிரட்டி பகுதிக்கும் விடுபட்ட பகுதிகளுக்கும் புதை வடிகால் திட்டத்தினை அமுல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதினால், ஒருங்கிணைந்த கரூர் நகராட்சி உட்பட்ட இனாம்கரூர், கரூர், தாந்தோணி மற்றும் சணப்பிரட்டி ஆகிய அனைத்து பகுதிகளுக்கும் ஒரே முறையிலான கழிவுநீர் கட்டணம், டெபாசிட் தொகைகளை வசூல் செய்யும் வகையில் கழிவறை இணைப்புகள் வழங்கும்வகையில் உபவிதிகளில் திருத்தங்கள் மேற்கொள்ளும் வகையில் திருத்திய டெபாசிட் மற்றும் சேவை கட்டண விபரங்களின்படி உபவிதிகளில் திருத்தங்கள் மேற்கொண்டு ஒருங்கிணைந்த கரூர் நகராட்சியில் அமுல்படுத்தும் வகையில் உபவிதிகளுக்கு உரிய ஒப்புதல் பெற்று வசூல் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| தற்போது உள்ள புதைவடிகால் உபவிதிகள் | திருத்தம் செய்யப்பட வேண்டிய புதைவடிகால் உபவிதிகள் |
|---|---|
| 1)தற்போதுள்ள புதைவடிகால் இணைப்பு ஒன்றுக்கு வீட்டு உபயோகத்திற்கு வழங்கப்பட்ட மாதாந்திர சேவைக் கட்டணம் ரூ.50/— ஆக வசூலிக்கப்பட்டு வருகிறது. | தற்போதுள்ள புதைவடிகால் இணைப்பு ஒன்றுக்கு வீட்டு உபயோகத்திற்கு வழங்கப்பட்ட மாதாந்திர கட்டணம் ரூ115/— ஆக வசூலிக்கப்பட வேண்டும். |
| 2) வீட்டு உபயோகத்திற்கு அல்லாத வணிக சம்பந்தமான காரியங்களுக்கு வழங்கப்படும் புதைவடிகால் இணைப்பு ஒன்றுக்கு ரூ.100/— மாதாந்திர சேவை கட்டணமாக வசூலிக்கப்பட்டு வருகிறது. | 2)வீட்டு உபயோகத்திற்கு அல்லாத வணிக சம்பந்தமான காரியங்களுக்கு வழங்கப்படும் புதைவடிகால் இணைப்பு ஒன்றுக்கு ரூ.230/— மாதாந்திர சேவை கட்டணமாக வசூலிக்கப்பட வேண்டும். |
| வீட்டு உபயோகத்திற்கு புதைவடிகால் இணைப்பிற்கான வைப்புத் தொகை ரூ.2000/— வசூலிக்கப்பட்டு வருகிறது. | வீட்டு உபயோகத்திற்கு புதைவடிகால் இணைப்பிற்கான வைப்புத் தொகை ரூ.5000/— வசூலிக்கப்பட வேண்டும். |
| வணிக உபயோகத்திற்கு புதைவடிகால் இணைப்பிற்கான வைப்புத் தொகை ரூ.5000/— வசூலிக்கப்பட்டு வருகிறது. | வணிக உபயோகத்திற்கு புதைவடிகால் இணைப்பிற்கான வைப்புத் தொகை ரூ.10,000/— வசூலிக்கப்பட வேண்டும். |
| தொழிற்சாலை உபயோகத்திற்கு புதைவடிகால் இணைப்பிற்கான வைப்புத் தொகை ரூ.10,000/— வசூலிக்கப்பட்டு வருகிறது. | தொழிற்சாலை உபயோகத்திற்கு புதைவடிகால் இணைப்பிற்கான வைப்புத் தொகை ரூ.25,000/— வசூலிக்கப்பட வேண்டும். |

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)புதை வடிகால்திட்டத்தில் புதிய வீட்டு கழிவறை இணைப்பு வழங்குவதற்கான டெபாசிட் தொகை மற்றும் சேவை கட்டண விபரங்களை உயர்வு செய்து உப விதிகளில் திருத்தங்கள் மேற்கொண்டு ஒருங்கிணைந்த கரூர் நகராட்சியில் ஒரே முறையிலான கட்டண விகிதங்களை அமுல்படுத்தும் வகையில் உபவிதிகளில் திருத்தங்கள் மேற்கொண்டு திருத்திய உபவிதிகளுக்கு திருத்திய சேவை கட்டணம் மற்றும் டெபாசிட் தொகையில் பொது அங்கீகாரம் பெற்று நடவடிக்கைகளை மேற்கொள்ள உரிய கருத்துருக்களை நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம். (இ5/12409/2015)

**தீர்மானம்** அனுமதிக்கப்பட்டது.

(ஒ/ம்) ம.செந்தில் முருகன்
தனி அலுவலர்

//உண்மை நகல்//

ஆணையாளர் 9/11/18
கரூர் நகராட்சி

9.11.18

## 31.10.2017ம் தேதிய நகர்மன்ற தீர்மான எண்.449ன் உண்மை நகல்

**பொருள்** நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடித ந.க.எண். 24687/2011/R1, நாள்.30.08.2017ல் தற்போதுள்ள நகராட்சியில் புதியதாக சேர்க்கப்பட்ட பகுதிகளுக்கு இணைக்கப்பட்ட நகராட்சியில் எவ்வாறு எந்த விகிதத்தில் வரிவிதிப்பு செய்யப்பட்டதோ, அதே விகிதத்தில் வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும் எனவும் பழைய வரிவிதிப்பினை தற்போதுள்ள நகராட்சியின் அடிப்படை மதிப்பிற்கு மாற்றப்படவேண்டும் எனவும் அதேபோல் குடிநீர் கட்டணங்கள் மற்றும் வைப்புத் தொகைகள் இணைக்கப்பட்ட நகராட்சிகளுக்கு தற்போது உள்ள நகராட்சியில் வசூலிக்கப்பட்டு வரும் கட்டணங்களின் விகிதங்களின் அடிப்படையிலும் அதேபோல் பாதாள சாக்கடை சேவை கட்டணம் மற்றும் வைப்புத் தொகைகள் இணைக்கப்பட்ட நகராட்சிகளுக்கு தற்போதுள்ள நகராட்சியில் வசூலிக்கப்பட்டு வரும் கட்டணங்களின் விகிதங்களின் அடிப்படையில் மாற்றப்படவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் (திருத்தம்) விதி எண்.07/2012. துணை பிரிவு 3ன்படி நகராட்சிகள் சொத்துவரியிணை புதியதாக சேர்க்கப்பட்ட பகுதிகளுக்கு வரிவிதிப்புகளை திருத்தலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாணை எண்.19 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (தேர்தல் ) துறை நாள் 14.01.2011 ன்படி கரூர் நகராட்சியுடன் 24.10.2011 முதல் தாந்தோணி, இனாம் கரூர் மற்றும் சணப்பிரட்டி ஆகிய இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு ஏற்கனவே கரூர் நகராட்சிக்கு 29.02.2008ம் தேதியில் நகர்மன்றத்தீர்மானம் எண்.957ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு கீழே கண்டுள்ள விவரப்படி நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

**கரூர் – சொத்துவரி (மண்டலம் வாரியாக ஏற்கனவே நடைமுறையில் இருந்து வரும் வரி மதிப்பு விவரம்)**

| மண்டலம் | அடிப்படை மதிப்பு (ஒரு சதுர அடிக்கு) | வகைபாடு | மண்டலம்A | | | மண்டலம்B | | | மண்டலம்C | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | RCC | ACC | TH | RCC | ACC | TH | RCC | ACC | TH |
| A | 1.60 | குடியிருப்பு | 2.72 | 2.04 | 1.05 | 2.12 | 1.59 | 1.06 | 1.28 | 0.95 | 0.65 |
| B | 1.25 | வணிகம் | 8.16 | 6.12 | 4.05 | 6.36 | 4.77 | 3.18 | 3.84 | 2.85 | 1.89 |
| C | 0.75 | தொழிற்கூடம் | 5.44 | 4.08 | 2.70 | 4.24 | 3.18 | 2.12 | 2.56 | 1.90 | 1.26 |

**இனாம் கரூர் –சொத்துவரி (மண்டலம் வாரியாக ஏற்கனவே நடைமுறையில் இருந்து வரும் வரி மதிப்பு விவரம்)**

| மண்டலம் | அடிப்படை மதிப்பு (ஒரு சதுர அடிக்கு) | வகைபாடு | மண்டலம்A | | | மண்டலம்B | | | மண்டலம்C | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | RCC | ACC | TH | RCC | ACC | TH | RCC | ACC | TH |
| A | 1.60 | குடியிருப்பு | 2.52 | 1.89 | 1.26 | 2.20 | 1.65 | 1.10 | 1.89 | 1.42 | 0.94 |
| B | 1.40 | வணிகம் | 7.56 | 5.67 | 3.78 | 6.60 | 4.95 | 3.30 | 5.67 | 4.26 | 2.82 |
| C | 1.20 | தொழிற்கூடம் | 5.04 | 3.78 | 2.52 | 4.40 | 3.30 | 2.20 | 3.78 | 2.83 | 1.89 |

## தாந்தோணி –சொத்துவரி (மண்டலம் வாரியாக ஏற்கனவே நடைமுறையில் இருந்து வரும் வரி மதிப்பு விவரம்)

| மண்டலம் | அடிப்படை மதிப்பு (ஒரு சதுர அடிக்கு) | வகைபாடு | மண்டலம்A | | | மண்டலம்B | | | மண்டலம்C | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | RCC | ACC | TH | RCC | ACC | TH | RCC | ACC | TH |
| A | 1.60 | குடியிருப்பு | 1.57 | 1.18 | 0.79 | Nill | Nill | Nill | 0.84 | 0.64 | 0.42 |
| B | இல்லை | வணிகம் | 4.72 | 3.55 | 2.36 | Nill | Nill | Nill | 2.54 | 1.91 | 1.27 |
| C | 0.70 | தொழிற்கூடம் | 3.15 | 2.36 | 1.57 | Nill | Nill | Nill | 1.68 | 1.27 | 0.85 |

## சணப்பிரட்டி–சொத்துவரி (மண்டலம் வாரியாக ஏற்கனவே நடைமுறையில் இருந்து வரும் வரி மதிப்பு விவரம்)

| மண்டலம் | அடிப்படை மதிப்பு (ஒரு சதுர அடிக்கு) | வகைபாடு | RCC | ACC | TH |
|---|---|---|---|---|---|
| குடியிருப்பு | 1.00 | குடியிருப்பு | 1.10 | 0.66 | 0.44 |
| வணிகம் | 1.60 | வணிகம் | 1.76 | 1.76 | 0.88 |
| தொழிற்கூடம் | 1.20 | தொழிற்கூடம் | 1.32 | 1.32 | 0.66 |

எனவே மேற்கண்ட பட்டியலில் இனாம் கரூர், தாந்தோணி மற்றும் சணப்பிரட்டி அகிய பகுதிகளுக்கு ஏற்கனவே உள்ள அடிப்படை மதிப்பினை நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடித ந.க. எண்.24687/2011/R1, நாள் 30.08.2017 தெரிவித்துள்ளபடி ரத்து செய்துவிட்டு கரூர் நகராட்சி முழுமைக்கும் கீழ்கண்ட அடிப்படை மதிப்பு (கரூர் நகராட்சியின்படி) பட்டியலின்படி சொத்து வரி உயர்வு செய்வது குறித்தும் மன்றத்தின் அனுமதிக்கு.

## கரூர்–சொத்துவரி (இனி நடைமுறைப்படுத்த வேண்டிய வரி மதிப்பு விவரம்)

| மண்டலம் | அடிப்படை மதிப்பு (ஒரு சதுர அடிக்கு) | வகைபாடு | மண்டலம்A | | | மண்டலம்B | | | மண்டலம்C | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | RCC | ACC | TH | RCC | ACC | TH | RCC | ACC | TH |
| A | 1.60 | குடியிருப்பு | 2.72 | 2.04 | 1.05 | 2.12 | 1.59 | 1.06 | 1.28 | 0.95 | 0.65 |
| B | 1.25 | வணிகம் | 8.16 | 6.12 | 4.05 | 6.36 | 4.77 | 3.18 | 3.84 | 2.85 | 1.89 |
| C | 0.75 | தொழிற்கூடம் | 5.44 | 4.08 | 2.70 | 4.24 | 3.18 | 2.12 | 2.56 | 1.90 | 1.26 |

மேலும் சிமெண்ட் கான்கிரீட் கட்டிடங்களை கொண்டு அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்படுவதால் தொழிற்சாலை பயன்பாடு (அல்லது) வணிகப் பயன்பாடு (கல்யாண மண்டபங்கள், நர்சிங் ஹோம் ஆகியவையும் சேர்த்து) கட்டிடங்களுக்கு பின்வருமாறும்.

(அ) தொழிற்கூடம் பயன்பாடு :அடிப்படை மதிப்பில் இரண்டு மடங்கு
(ஆ) வணிக பயன்பாடு
(கல்யாண மண்டபம், நர்சிங் ஹோம்: அடிப்படை மதிப்பில் மூன்று மடங்கு
போன்றவைகளுக்கும் இன்னும் பிற)
(இ) விளம்பர பலகைகள் மற்றும் தொலை தொடர்பு டவர்களுக்கும், வணிக பயன்பாடு மதிப்பில் வாடகை நிர்ணயம் செய்ய வேண்டும்.

சிறப்பு கட்டிட பயன்பாடுகளாக கருதப்படும் கட்டிடங்களுக்கு (ஸ்டார் ஹோட்டல், தீம் பார்க், பல அடுக்கு வணிக வளாகம், குளிர்சாதன வசதிகளுடன் கூடிய கல்யாண மண்டபம், சூப்பர் ஸ்பெசாலிட்டி மருத்துவமனைகள் போன்றவை) பின் வருமாறு அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்திட மன்றத்தின் அனுமதிக்கு.

| மண்டலம் | அடிப்படை மதிப்பு (ஒரு சதுர அடிக்கு) |
|---|---|
| A | |
| B | ரூ.10/– |
| C | |

1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 310 ஆவது பிரிவின் கீழ் கரூர் நகர்மன்றம் தனது 27.02.2004 ஆம் நாளைய தீர்மான எண் 65 இன் தீர்மானத்தின் படியும், நகராட்சி நிர்வா ஆணையரக கண்காணிப்புப் பொறியாளர் அவர்களின் செயல்முறைகள் கடித எண்.6634/2003/குள/1. நாள் 17.02.2004 ஆம் நாள் ஒப்புதல் வழங்கி உள்ளபடியும் கரூர் நகராட்சி குடிநீர் உபவிதிகளின்படி கீழ்கண்டவாறு குடிநீர் கட்டணங்களையும், கரூர் நகராட்சியின் நகர்மன்ற தீர்மானம் எண்222 நாள்.13.07.2010ன்படி குடிநீர் வைப்புத்தொகைகளை கீழ்கண்டுள்ள விவரப்படி வசூல் செய்யப்பட்டு வருகிறது.

**ஏற்கனவே இருந்து வரும் குடிநீர் கட்டணம் மற்றும் வைப்புத் தொகை விவரங்கள்**

| வ எ | குடிநீர் கட்டணம் முறை | கரூர் நகராட்சி | | இனாம் கரூர் நகராட்சி | | தாந்தோணி நகராட்சி | | சணப்பிரட்டி ஊராட்ச்சி | | உப விதிகளின்படி டெபாசிட் மற்றும் குடிநீர் கட்டணங்கள் நிர்ணயம் செய்த நாள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | டெபாசிட் தொகை | குடிநீர் கட்டணம் மாதம் ஒன்றுக்கு | டெபாசிட் தொகை | குடிநீர் கட்டணம் மாதம் ஒன்றுக்கு | டெபாசிட் தொகை | குடிநீர் கட்டணம் மாதம் ஒன்றுக்கு | டெபாசிட் தொகை | குடிநீர் கட்டணம் மாதம் ஒன்றுக்கு | |
| 1 | வீட்டு உபயோக இணைப்புகளுக்கு (Domestic ) 1000லிட்டருக்கு (குறைந்தபட்ச கட்டணமாக) 1000லிட்டருக்கு மேல் உபயோகிக்கும் 1000லிட்டருக்கு ரூ.5/– வீதம் அளவுமானி கணக்கெடுப்பின்படி குடிநீர் கட்டணம் வசூல் செய்யப்படும். | ரூ.5000/– MCR NO. 222. நாள். 13.7.2010ன் டி | ரூ.93/– | ரூ.3000/– | ரூ.50/– | ரூ.3000/ – | ரூ.50/– | ரூ.1000/ | ரூ.30/– | 1. இனாம் கரூர் நகர்மன்ற தீர்மான எண்.65/27. 02.2004 பேரூராட்சி இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறைகள் கடித ந.க.எண்.3760/2004/டி1 |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | வீட்டு உபயோக மில்லாத மற்ற காலியிடங்களுக்கு, வணிகமுறை இணைப்புகளுக்கு (NonDomestic commercial) 1000 லிட்டருக்கு (குறைந்தபட்ச கட்டணமாக) 1000லிட்டருக்கு மேல் உபயோகிக்கும் 1000 லிட்டருக்கு ரூ.12/–வீதம் அளவுமானி கணக்கெடுப்பின்படி குடிநீர் கட்டணம் வசூல் செய்யப்படும் | ரூ.10000 MCR NO. 222. நாள்.13.7.2010ன்படி | ரூ.416/– | ரூ.6000/– | ரூ.120/– | ரூ.6000/– | ரூ.130/– | ---- | ----- | நாள்.18.02.2004<br>2. தாந்தோணி 3ம்நிலை நகராட்சி கடித ந,க.எண். 205/2004 நாள்.08.07.05.<br>3. கரூர் நகராட்சி ந.க.எண்.எ2/9359/03 நாள்.15.04.04 |

எனவே, மேற்கண்ட பட்டியலில் இனாம்கரூர், தாந்தோணி மற்றும் சணப்பிரட்டி ஆகிய பகுதிகளுக்கு ஏற்கனவே உள்ள குடிநீர் கட்டண விகிதங்களையும் ரத்து செய்துவிட்டு கரூர் நகராட்சி முழுமைக்கும் (கரூர் நகராட்சியின்படி) ஒரே குடிநீர் கட்டணம் நிர்ணயம் செய்யுமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடித ந.க.எண்.24687/2011/ஆர்1 நாள்.30.08.2017ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்நகராட்சியில் கரூர், தாந்தோணி, இனாம்கரூர் ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் அபிவிருத்தி திட்டப் பணிகள் மேற்கொள்வதற்கு ரூ.68.40கோடியில் பணிகள் நடைபெற்று வருகிறது. இதில் TNUDF நிறுவனத்தின் மூலம் ரூ.36.12கோடி கடன் தொகையாக பெறப்பட்டுள்ளது. மேற்படி கடன் தொகைக்காக TNUDF நிறுவனத்திற்கு ஆண்டுதோறும் ரூ.2,14,58,452/– செலுத்தப்பட்டு வருகிறது. மேலும் குடிநீர் பராமரிப்பு பணிகளுக்காக ஆண்டுதோறும் ரூ.10,47,84,109/–யும், பணியாளர்களின் ஊதியத்திற்காக ஆண்டுதோறும் ரூ.1,38,18,084/–ம் மற்றும் மின்கட்டணமாக ஆண்டுதோறும் ரூ.5,08,61,053/–ம் செலவிடப் பட்டு வருகிறது. TNUDF Projects Karur WSIS Dated.24.05.2010ம் தேதிய கடிதத்தில் கரூர் நகராட்சியில் குடிநீர் கட்டணம் வீட்டு உபயோகத்திற்கு மாதம் ரூ.93/– லிருந்து ரூ.116/–வும், வணிக உபயோகத்திற்கு மாதம் ரூ.415/– லிருந்து ரூ.549/– ஆக வசூல் செய்வதற்கு பரிந்துரை கடிதம் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி குடிநீர் கட்டண விகிதங்களை மாற்றம் செய்திட இந்நகர்மன்றத்தின் தீர்மான எண்.192 நாள்.28.05.2010ல் புதிய குடிநீர் திட்டம் மக்கள் பயன்பாட்டிற்கு வந்த பிறகு அமுல்படுத்திட தீர்மானித்துள்ளது. அதன்படி கரூர் நகராட்சியில் காவேரி கூடுதல் குடிநீர் திட்டம் கரூர், தாந்தோணி பகுதிகளில் முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்துள்ளதாலும் இனாம் கரூர் பகுதியில் 70% பணிகள் முடிக்கப்பட்டு தொடர்ந்து பணிகள் நடைபெற்று விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு

வழங்கப்படும் நிலையில் உள்ளதாலும், இந்நகராட்சியின் நிதிநிலைமை கருத்தில் கொண்டும் இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 48 வரையுள்ள பகுதிகளுக்கும் ஒரே முறையான சீராக குடிநீர் இணைப்பிற்கான டெபாசிட் மற்றும் குடிநீர் கட்டணங்களை மேற்கண்ட மன்ற தீர்மானத்தில் பதிவு செய்யப்பட்ட விவரப்படி நிர்ணயம் செய்தும், உபவிதிகளில் திருத்தங்கள் மேற்கொண்டு உபவிதிகளுக்கு உரிய ஒப்புதல் பெற்று வசூல் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>குடிநீர் கட்டணம் (இனி நடைமுறைப்படுத்த வேண்டிய மதிப்பு விவரம்)</u>

| வ.எ | குடிநீர் கட்டண விபரம் | புதிய குடிநீர் இணைப்பிற்கான டெபாசிட் விபரம் | மாதாந்திர குடிநீர் கட்டணம் |
|---|---|---|---|
| 1) | வீட்டு உபயோக இணைப்பு ஒன்றுக்கு | ரூ.5,000/– | ரூ.135/–<br>(மீட்டர் கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூ.10/–) |
| 2) | வீட்டு உபயோகமில்லாத வணிக நோக்க உபயோகத்திற்கான இணைப்பு ஒன்றுக்கு | ரூ.10,000/– | ரூ.540/–<br>(மீட்டர் கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூ.10/–) |
| 3) | தொழிற்சாலை இணைப்பு ஒன்றுக்கு | ரூ.25,000/– | ரூ.750/–<br>(மீட்டர் கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூ.10/–) |

<u>பாதாள சாக்கடை சேவை கட்டணம் மற்றும் வைப்புத் தொகை (ஏற்கனவே நடைமுறையில் இருந்து வரும் மதிப்பு விவரம்)</u>

| | கரூர் நகராட்சி | | இனாம் கரூர் நகராட்சி | | தாந்தோணி நகராட்சி | | சணப்பிரட்டி ஊராட்சி | | உபவிதிகளின் படி டெபாசிட் மற்றும் பாதாள சாக்கடை சேவை கட்டணங்கள் நிர்ணயம் செய்த நாள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | டெபாசிட் தொகை | பாதாள சாக்கடை கட்டணம் மாதம் ஒன்று | டெபாசிட் தொகை | பாதாள சாக்கடை கட்டணம் மாதம் ஒன்று | டெபாசிட் தொகை | பாதாள சாக்கடை கட்டணம் மாதம் ஒன்று | டெபாசிட் தொகை | பாதாள சாக்கடை கட்டணம் மாதம் ஒன்று | |
| வீட்டு உபயோகம் | 5000 | 115/– | 2000/– | 50/– | – | – | – | – | 1)இனாம் கரூர் நகர்மன்ற தீர்மான எண்.577, நாள்.20.12.2000<br>2) கரூர் நகராட்சி நகர்மன்ற தீர்மான எண்.67, நாள்.31.01.2000 |
| வணிக உபயோகம் | 10000<br>25000 | 230/– | 5000/–<br>10000/– | 100/– | – | – | – | – | |

மேற்கண்ட பட்டியலில் இனாம்கரூர் பகுதிகளுக்கு ஏற்கனவே உள்ள பாதாள சாக்கடை சேவை கட்டண விகிதங்களை நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடித ந.க.எண்.24687/2011/R1, நாள்.30.08.2017 ல் தெரிவித்துள்ளபடி பழைய பாதாள சாக்கடை சேவை கட்டணம் மற்றும் வைப்புத் தொகையினை ரத்து செய்து விட்டு கரூர் நகராட்சி முழுமைக்கும் கீழ்கண்டவாறு (கரூர் நகராட்சியின்படி) பாதாள சாக்கடை சேவை கட்டணம் மற்றும் வைப்புத் தொகையாக இருக்கும் வகையில் இனாம் கரூர் நகராட்சி பகுதியில் உயர்வு செய்திட நடவடிக்கை எடுக்குமாறு உ.திரவிடப்பட்டுள்ளதின் அடிப்படையில் திருத்திய விகிதப்படி பாதாள சாக்கடை சேவைக் கட்டணம் மற்றும் வைப்புத் தொகை உயர்வு செய்து நிர்ணயிக்க மன்றத்தின் அனுமதிக்கு.

**உயர்வு செய்யப்பட்ட வைப்புத்தெகை மற்றும் சேவை கட்டண விபரம் (இனி நடைமுறைப்படுத்த வேண்டிய மதிப்பு விவரம்)**

| வ.எண் | பாதாள சாக்கடை சேவை கட்டணம் | டெபாசிட் தொகை | பாதாள சாக்கடை சேவை கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|---|
| 1 | வீட்டு உபயோகம் | 5000/– | 115/- |
| 2 | வணிக உபயோகம் | 10000<br>25000 } | 230/- |

**அலுவலகக் குறிப்பு**

1)நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.24687/2011/R1, நாள்.30.08.2017 மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும்.

2)சுற்றறிக்கையின்படி கரூர் நகராட்சியுடன் புதியதாக இணைக்கப்பட்ட பகுதிகளான இனாம் கரூர், தாந்தோணி மற்றும் சணப்பிரட்டி ஆகிய பகுதிகளில் உள்ள வரிவிதிப்புகளை ஏற்கனவே கரூர் நகராட்சியில் உள்ளஅடிப்படை மதிப்பின்படி சொத்து வரி, குடிநீர் கட்டணம், குடிநீர் வைப்பு தொகை மற்றும் பாதாள சாக்கடை சேவை கட்டணம் மற்றும் பாதாள சாக்கடை வைப்புத் தொகைகளை உயர்வு செய்திட மன்றம் அனுமதி வழங்கலாம்.

3)அரசு நீர் நிலையிலிருந்து குடிநீரை எடுப்பதற்காக தமிழ்நாடு மாசு கட்டுபாட்டு வாரியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய தீர்வை வரியினை குடிநீர் உபயோகிப்பவர்களிடமிருந்து வசூல் செய்து செலுத்த வேண்டியுள்ளதால் மாதாந்திர கட்டணத்துடன் சேர்த்து ரூ.5/– வசூல் செய்யவும், உபவிதிகளின் திருத்தங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

4)மேற்கண்ட விபரத்தினை தினசரி செய்திதாள் மற்றும் அரசிதழில் வெளியிடப்படுவதற்கு ஆகும் செலவினத்தை பொது நிதியில் இருந்து செலவு செய்திட மன்றம் அனுமதி வழங்கலாம்.

(9174/2017/அ1)

தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.

(ஒ/ம்) ப.அசோக்குமார்
தனி அலுவலர்

//உண்மை நகல்//

[signature] 9/11/18
ஆணையாளர்
கரூர் நகராட்சி

[initials]
9.11.18